23rd March 1961]

(c) Does not arise, as the Government of India's orders have not been received.

SRI N. K. PALANISAMI : May I know, Sir, the object of creating such posts?

THE HON. SRI C. SUBRAMANIAM : முன்னல் இருந்த ஐ.ஸி.எஸ். காரர்களுக்கு சூப்பர் டைம் ஸ்கேல் இருந்து வந்திருக்கிறது. அது ஐ.எ.எஸ். காரர்களுக்கு இல்லே. அதிலும் முக்கியமாக மற்ற ராஜ்யங்களில் இருக்கின்ற ஐ.எ.எஸ். காரர்களுக்கு இந்த முறை இருந்து வருகிறது. அந்த முறையில்தான் நம்முடைய ராஜ்யத்திலும் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

SRI N. K. PALANISAMI : May I know, Sir, whether this is peculiar to this State ? Is it followed by other States ?

THE HON. SRI C. SUBRAMANIAM : As a matter of fact, we are late in the field ; perhaps, we are the last.

Regional Engineering College (location)

*1033 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the location of Regional Engineering College under the Third Five-Year Plan was considered by the Government during January 1961 ; and

(b) whether any decision was taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

Poultry farm (Alathampadi)

*1034 *Q*.—SRI A. VEDARATHNAM ; கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் உள்ள ஆலத்தம்பாடியில் ஓர் பெரிய கோழிப்பண்ணையை ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா ?

(இ) என்ன செலவில், எப்போது ?

(உ) இதற்கு மத்திய அரசாங்க உதவி உண்டா ? எவ்வளவு ?

(எ) ஆண்டுதோறும் இதற்காகும் நடைமுதல் செலவு என்ன ?

(ஐ) இதிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir. It is proposed to establish one Poultry Extension Centre.

(b) at a total cost of Rs. 63,450 during 1960–61.

(c) Yes, Sir. The Central assistance is at the following rates—

Non-recurring		.. ..	75 per cent of the expenditure as grant and 25 per cent as loan.
Recurring	1st year	..	50 per cent of the expenditure.
	2nd year	..	33 1/3 Do.
	3rd year	..	25 Do.
	4th year	..	Nil.

[23rd March 1961

(*d*) Rs. 9,000 (roughly).

(*e*) Rs. 800.

SRI A. VEDARATHNAM : இந்த மாதிரி கோழிப்பண்ணைகள் வேறு எங்காவது இருக்கின்றனவா, இல்லையென்றால் புதிதாக ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ? அப்படியென்றால் எங்கே ஏற்படுத்துவதாக உத்தேசம் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி 25 சென்டர்களில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, தஞ்சாவூர், சேலம், தென்னார்காடு, மதுரை, நீலகிரி, கன்னியாகுமரி, செங்கற்பட்டு போன்ற பல ஜில்லாக்களிலும் இது அமைக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 20 சென்டர்களில் 20 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்த திட்டங்கள் இருக்கின்றன.

SRI K. B. S. MANI : இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோழிப் பண்ணைகளில் எத்தனை கோழிகள் இருக்கின்றன. இதில் பெரிய கோழிப் பண்ணை எது ? மேலும், தனிப்பட்டவர்கள் யாராவது கோழிப்பண்ணை நடத்த முன்வந்தால் சர்க்கார் எந்த விதமான உதவிகளை செய்து கொடுக்கும் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றியுள்ள விவரங்களை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்றால் தனியாக கேள்வி போடவேண்டும்.

Electricity supply to villages in Javadu Hills

*1035 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் போளூர் தாலுகா ஜவ்வாது மலையிலுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்க மானியம் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த ஜவ்வாது மலையிலுள்ளவர்களுக்கு, சில இடங்களில் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, அது ''அன்ரெம் னரேடிவ்''வாக இருக்கிறது என்று மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இதற்காக சர்வே செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே '' ஹில் டிரைப் '' வாழுகின்ற இடம் என்ற முறையில் இந்த இடத்தைக் கருதி இதற்காக அரிஜன இலாகாவிலிருந்து பணத்தைப் பெற்று உடனடியாக மின்சாரவசதி செய்து கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : முன்பு இந்த இடத்தில் சர்வே செய்யப்பட்டு இந்தத் திட்டம் கட்டுப்படியாகாது என்று கருதி கைவிடப்பட்டது. இப்போது மீண்டும் அதே இடத்தில் சர்வே செய்யச் சொல்லியிருக்கிறோம். அரிஜன இலாகாவிலிருந்து மான்யம் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. மின்சார போர்டாரே இம்மாதிரிப்பட்ட இடங்களுக்கு எந்தெந்த முறையில் வசதி செய்துகொடுக்க முடியுமோ அந்தந்த முறையில் வசதி செய்து கொடுப்பார்கள். பொதுவாக ஹில் டிரைப் இருக்கக் கூடிய இடங்களுக்கு எல்லாம் எந்த முறையில் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: இப்படி மின்சாரத்தை மலைகளிலும், காடுகளிலும், மூலைமுடுக்குகளிலும் விஸ்தரிக்க முடியும், அவ்விதம் செய்து கொண்டும் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால்தானே இவ்விதம் மலையிலுள்ள மக்கள் கேட்கிறார்கள் ?

(பதில் இல்லை.)